## பாடம்: 2 - திருக்குறள்

**வகுப்பு** : V

**பாடம்** : **தமிழ்**

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. 'ஆன்ற' - இச்சொல்லின் பொருள்...................

**அ) உயர்ந்த** ஆ) பொலிந்த இ) அணிந்த ஈ) அயர்ந்த

2. பெருஞ்செல்வம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

அ) பெருஞ் + செல்வம் ஆ) பெரும் + செல்வம்

**இ) பெருமை + செல்வம்** ஈ) பெரு + செல்வம்

3.பண்புடைமை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

அ) பண் + புடைமை ஆ) பண்பு + புடைமை

**இ) பண்பு + உடைமை** ஈ) பண் + உடைமை

4. அது + இன்றேல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ...........

**அ) அது இன்றேல்** ஆ) அதுயின்றேல் இ) அதுவின்றேல் ஈ) அதுவன்றேல்

5.பாடலில், நேர்மை என்னும் பொருள் தரும் சொல் ..............

**அ) நயன்** ஆ) நன்றி இ) பயன் ஈ) பண்பு

**ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

அ) இவ்விரண்டும் - இ + இரண்டும்

ஆ) மக்கட்பண்பு - மக்கள் + பண்பு

**இ. உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| அன்புடைமை | ஆசிரியர் | இகழ்தல் | ஈகை |
| உதவி | ஊன்றுகோல் | எய்யாமை | ஏகன் |
| ஐம்பால் | ஒற்றுமை | ஓங்காரம் | ஔவியம் |

**ஈ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| பண்புடையார் | நயனொடு | அரம்போலும் |
| மண்புக்கு | பயனுடையார் | மரம்போல்வர் |

**உ. அன்புடைமை, பண்புடைமை போல் ஈற்றில் 'மை' என முடியும்படி நான்கு சொற்கள் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| அசைவின்மை | அறியாமை | அளவின்மை | அழியாமை |
| ஆசையின்மை | நேர்மை | ஏழ்மை | கல்லாமை |

**ஊ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?**

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயலாகும்.

**2. 'மரம் போன்றவர்' எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?**

அரத்தைப்போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், மரத்தைப் போன்றவர் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது.

**3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும்?**

பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது, தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது போன்று பயனில்லாமல் போகும்.

**எ. சிந்தனை வினா.**

**1. ஒருவரின் பண்புகளைக் கொண்டே, இந்த உலகம் அவரை மதிக்கிறது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?**

ஒருவரின் பண்புகளைக் கொண்டே, இந்த உலகம் அவரை மதிக்கிறது. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று புறநானூறு கூறும். ஒருவர் நற்செயல்களைச் செய்து, அன்புடன் பேசுதல், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணுதல், இன்சொல் பேசுதல் ஆகிய நற்பண்புகளுடன் செயல்புரிந்தால் அவரை இவ்வுலகம் மதிக்கும் என்பதில் ஐயமில்லை.

## உரைநடை - தமிழர்களின் வீரக்கலைகள்

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1.தமிழரின் வீர விளையாட்டாகக் கருதப்படாதது ..............

அ) சிலம்பம் ஆ) மற்போர் **இ) மட்டைப்பந்து** ஈ) நீர் விளையாட்டு

2. 'மஞ்சு விரட்டு' என்பதைக் குறிக்கும் விளையாட்டு ....................

அ) மற்போர் **ஆ) ஏறுதழுவுதல்** இ) சிலம்பாட்டம் ஈ) வில்வித்தை

3. மற்போர் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) மற் + போர் ஆ) மள் + போர் இ) மல் + போர் **ஈ) மறு + போர்**

4.தன் + காப்பு - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..............

அ) தன்காப்பு ஆ) தண்காப்பு இ) தனிகாப்பு **ஈ) தற்காப்பு**

5.ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ள கலை .......

அ) சிலம்பாட்டம் **ஆ) வில்வித்தை** இ) ஏறுதழுவுதல் ஈ) வழுக்கு மரம் ஏறுதல்

**ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

அ) சிலம்பு + ஆட்டம் - சிலம்பாட்டம்

ஆ) வீரம் + கலை - வீரக்கலை

**இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

அ) தனக்கென்று - தனக்கு + என்று

ஆ) கொடைத்திறம் - கொடை + திறம்

**ஈ. பொருத்துக**

1. காளை - திமில்
2. சிலம்பு - கம்பு
3. சிறுவாரைக்கம்பு - மூங்கில்
4. தாளாண்மை – முயற்சி
5. தாளாண்மை - உழவு

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1.தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.**

- சிலம்பாட்டம்
- ஏறுதழுவதல்

**2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?**

ஏறு என்பது, காளை மாட்டைக் குறிக்கும். ஏறு தழுவுதல் என்பது, காளையைத் தழுவி, அதன் வீரத்தை அடக்குவதாகும்.

**3. சிலம்பாட்டம் - பெயர்க்காரணம் தருக.**

சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர். கம்பு சுழற்றுதல் என்னும் பெயரும் உண்டு.

**4. வல்வில் ஓரியின் வில்லாற்றல் சிறப்பைக் கூறுக.**

(i) கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ‘வல்வில் ஓரி’ வில்லாற்றலில் சிறந்து விளங்கியவர் என்பதைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம்.

(ii) அவர், வேட்டையாட காட்டுக்குச் சென்றபோது, பெரிய யானையொன்று எதிர்ப்பட, அதன் மீது அம்பெய்தினார்.

(iii) அந்த அம்பானது, அப்பெரிய யானையின் தலையில் பாய்ந்தும், அங்குக் குறுக்கிட்ட பெரும்புலியைக் கொன்றும், அதனைக் கடந்து சென்ற கலைமானைச் சாய்த்தும், மேலும் விசை குறையாமல் சென்று, ஒரு பன்றியின் மேல் பாய்ந்ததோடு அல்லாமல், புற்றிலே இருந்த ஓர் உடும்பின் மீதும் பாய்ந்து தன் சினம் தீர்ந்தது என்று புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

(iv) படைத் திறமும் கொடைத் திறமும் கொண்டு விளங்கிய வல்வில் ஓரியை வன்பரணர் இவ்வாறு பாடி மகிழ்ந்தார்.

**5. மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது**

இருவர் கைகோர்த்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும் ஒருவருடன் ஒருவர் போர் செய்வதே மற்போர்.

**ஊ. சிந்தனை வினாக்கள்.**

**1. சிலம்பாட்டம் தற்காப்புக் கலைகளுள் ஒன்று. ஏன்?**

- சிலம்பாட்டம் தற்காப்புக் கலைகளுள் ஒன்றுதான்.
- ஏனென்றால் சிலம்பு எடுத்து சுழற்றும்போது உடம்பில் உள்ள ஒவ்வொரு நாடி, நரம்பும், தசைகளும் இயக்கப்படுகின்றன.
- கம்பைக் கைகளால் பிடித்து, தன்னைச் சுற்றிலும் சுழற்றிச் சுற்றும்போது தம் உடலைச் சுற்றிலும் ஒரு வேலி போன்ற அமைப்பை உருவாக்கிட முடியும்.
- ஒரே ஒரு தடியைக் கொண்டு அமைக்கும் இது போன்ற வேலிக்குள் வேறு ஆயுதங்களைக் கொண்டு யார் தாக்க முற்பாட்டாலும் அதனை சுழற்றும் கம்பால் தடுத்திட முடியும்.

**2. உடலில் உறுதி உடையவரே உலகை ஆளும் உள்ள உறுதி உடையவர். இவ்வரிகளை பற்றி உமது கருத்து யாது?**

'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். நம் உடல் நலம் நன்றாக இருந்தால்தான் உள்ளமும் நன்றாக இருக்கும். உடல் வலிமை பெறும்போது எதையும் தாங்கும் திறனைப் பெற முடியும். தெளிவான மனம் அமையும். சோம்பலின்றி சுறுசுறுப்பாகச் செயலாற்ற முடியும். உள்ளம் துடிதுடிப்பாக இருக்கும். அதனால் உலகை ஆளும் அளவிற்கு உள்ள உறுதியைத் தருகிறது.

**எ. எதிர்ச்சொல் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. இன்பம் | x | துன்பம் |
| 2. செயற்கை | x | இயற்கை |
| 3. வாழ்தல் | x | வீழ்தல் |
| 4. இன்சொல் | x | வன்சொல் |
| 5. குறைந்த | x | நிறைந்த |
| 6. போற்றும் | x | தூற்றும் |

## துணைப்பாடம் - கங்கை கொண்ட சோழபுரம்

**அ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. முதலாம் இராசேந்திர சோழனை ஏன் கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கிறோம்?**

முதலாம் இராசேந்திர சோழன் வட நாடு சென்று பகைவர்களை வென்று கங்கை

நீரைக் கொண்டு வந்ததன் அடையாளமாகத்தான் கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கிறோம்.

**2. சிங்கமுகக் கிணறு - குறிப்பு எழுதுக.**

சிங்க வடிவத்தில் சிங்கமுகக் கிணறு அமைந்திருக்கும். இந்தச் சிற்பத்தின் வயிற்றில் ஒரு வாயில் இருக்கும்.

**3. சோழ கங்கப் பேரேரிக்கு நீர் எங்கிருந்து வருகிறது?**

மலைகளும் குன்றுகளும் இல்லாத சமவெளியில் பதினாறு கல் தொலைவு வரை வலிமையான உயரமான கரைகளைக் கட்டி, நீண்ட கால்வாய் வெட்டித் தண்ணீரைப் பள்ளத்தாக்கிலிருந்து மேட்டிற்குக் கொண்டு வந்து, ஏரியில் தேக்கி வைத்தனர்.

சோழ கங்கப் பேரேரி இன்றி பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது.

**4. கங்கை கொண்ட சோழபுரம் கோவிலிலுள்ள வாயில்களின் பெயர்களைக் கூறுக.**

தெற்குப் பக்க நுழைவாயில்

வடக்குப் பக்க நுழைவாயில்.

## ஆ. சிந்தனை வினா.

**1. ஏரிகளும் குளங்களும் தூர் வாரப்படாமல் மண்மூடி இருந்தால் என்ன ஆகும்? கருத்துகளைக் குழுவில் பகிர்ந்து கொள்க.**

மாணவன் 1 : ஏரிகளும் குளங்களும் தூர் வாரப்படாமல் மண்மூடி இருந்தால் மழைநீரைத் தேக்கி வைக்க முடியாது.

மாணவன் 2 : நிலத்தடி நீரின்றி மக்கள் துன்பப்படுவர்.

மாணவன் 3 : விவசாயத்திற்குப் போதுமான நீர் கிடைக்காது.

மாணவன் 1 : நீர்நிலைகள் மண் மூடிய நிலையில் உள்ளதால், மழைக்காலங்களில் வரும் மழைநீர் சிறிதளவே தேங்கும். உபரிநீர் வீணாகக் கடலில் கலந்துவிடும்.

மாணவன் 2 : கோடைக்காலங்களில் நீர்நிலைகளைத் தூர்வாரி நிலத்தடி நீரைச் சேமிக்க வேண்டும்.

## கற்கண்டு - இணைப்புச்சொற்கள்

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1.'அதனால்' என்பது ..........

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) உரிச்சொல் **ஈ) இணைப்புச்சொல்**

2.கருமேகங்கள் வானில் திரண்டன ..................மழைபெய்யவில்லை .இத்தொடருக்குப் பொருத்தமான இணைப்புச்சொல்

அ) எனவே ஆ) ஆகையால் இ) ஏனெனில் **ஈ) ஆயினும்**

3. கண்ணன் பேருந்தில் செல்ல விரும்பினான் ........... அவன் நண்ப ன் மிதிவண்டியே போதும் என்றான்.

அ) அதனால் ஆ) ஆதலால் இ) இருந்தபோதிலும் **ஈ) ஆனால்**

**ஆ. கீழ்க்காணும் தொடர்களை இணைத்து எழுதுக**

1. நான் விளையாடச் சென்றேன். கண்ணன் விளையாடச் சென்றான். **(உம்).**

நானும் கண்ணனும் விளையாடச் சென்றோம்.

2. வள்ளி எழுதி முடித்துவிட்டாள். எழிலி எழுதவில்லை . **(ஆனால்)**

வள்ளி எழுதி முடித்துவிட்டாள். ஆனால் எழிலி எழுதவில்லை.

3. பெருமழை பெய்தது. ஏரி, குளங்கள் நிரம்பின. **(அதனால்)**

பெருமழை பெய்தது. அதனால் ஏரி, குளங்கள் நிரம்பின.

4. முகில் பள்ளிக்குச் செல்லவில்லை. அவனுக்கு உடல்நலமில்லை. **(ஏனெனில்)**

முகில் பள்ளிக்குச் செல்லவில்லை. ஏனெனில் அவனுக்கு உடல்நலமில்லை.

5. அறிவு வளர்ச்சிக்குக் கணினி தேவை. கணினியை இயக்கத் தெரிதல் வேண்டும். **(ஆகவே)**

அறிவு வளர்ச்சிக்குக் கணினி தேவை. ஆகவே கணினியை இயக்கத் தெரிதல் வேண்டும்.

**இ. கீழ்க்காணும் உரைப்பகுதியில் பொருத்தமான இணைப்புச்சொற்களை இணைத்து எழுதுக.**

**(ஆனால், அதனால், ஏனெனில், ஆகையால், எனவே, ஆகவே, பிற)**

அடர்ந்த காடு ஒன்றில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. ஆனால், சிங்கம் மட்டும் அரசனாக விளங்கியது. ஏனெனில், அது பார்ப்பதற்கு மிடுக்கான தோற்றமுடையது. ஆகையால், அதனைக் கண்டு பிற விலங்குகள் அஞ்சின. எனவே, அது தனியாகக் குகையில் வசித்தது. ஆனால் அது எப்போதும் விழிப்போடு இருந்தது. ஒருநாள் அதற்குப் பசித்தது. அதனால் குகைக்கு வெளியே வந்து இரைக்காகக் காத்திருந்தது. சிங்கத்தைப் பார்த்தவுடன் பிற விலங்குகள் அஞ்சியோடின. ஏனெனில், அவற்றைச் சிங்கம் அடித்துவிடும் அல்லவா?

**ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. இணைப்புச் சொற்கள் எதற்குப் பயன்படுகின்றன?**

தங்கு தடையின்றிப் பேசவும், எழுதவும் இணைப்புச்சொற்கள் பயன்படுகின்றன.

**2. இணைப்புச்சொற்களுள் நான்கு எழுதுக.**

அதனால்

ஆகையால்

அப்படியானால்

ஆதலால்

**3. இணைப்புச்சொற்களைப் பயன்படுத்தி, எவையேனும் இரண்டு தொடர்களை எழுதுக.**

கண்ணன் வந்துவிடுகிறேன் என்றான். ஆனால், இன்னும் வரவில்லை.

நான் தாய்நாட்டிலேயே பணியாற்ற விரும்புகிறேன். ஆகையால், வெளிநாடு செல்லமாட்டேன்.

## மொழியை ஆள்வோம்

**2. தொடரில் அமைத்து எழுதுக.**

வெற்றி - குமரன் மல்யுத்த போட்டியில் முதல் பரிசு பெற்று வெற்றி வாகை சூடினான்.

நாகரிகம் - தனக்கென்று தனித்த நாகரிகமும் பண்பாடும் உடையது தமிழ் மரபு.

உழவுத்தொழில் - கண்ணன் தன் விடாமுயற்சியால் உழவுத்தொழிலில் வளம் பெருக்கினான்.

கலையழகு - கண்ணன் வரைந்த ஓவியம் கலையழகின் மொத்த உருவமாகும்.

**3. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

அரசர்க்குரிய அங்கங்களுள் தலைசிறந்தது படை. படைத்திறத்தால் அரசன் உட்பகையை அழிப்பான். புறப்பகையை ஒழிப்பான். முன்னாளில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நாற்படையுடைய அரசன் மிகச் சிறந்தவனாக மதிக்கப்பெற்றான். நால்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமும் பெற்றது யானைப்படை. போர்க்களத்தில் வீறுகொண்டு செம்போர் விளைப்பதும், மாற்றார்க்குரிய மாட மதில்களைத் தாக்கித் தகர்ப்பதும் யானைப்படையே ஆகும். வலிமை சான்ற அழகிய யானை, பட்டத்து யானை என்று பெயர் பெற்றது. உயர்ந்த மேனியும், ஓங்கிய நடையும், சிறந்த கொம்பும், பரந்த அடியும், சிறிய கண்ணும், செந்நிற வாயும் உடைய யானையே அப்பதவிக்கு உரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**1. நால்வகைப் படைகள் யாவை?**

தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.

**2. நால்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமும் பெற்றது எது?**

நால்வகைப் படைகளுள் ஏற்றமும் தோற்றமும் பெற்றது யானைப்படை.

**3. மாற்றார் என்னும் சொல்லின் பொருள் யாது?**

மாற்றார் என்னும் சொல்லின் பொருள் பகைநாட்டரசர் (பகைவர்).

**4. உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

உயர்ந்த மேனியும், ஓங்கிய நடையும், சிறந்த கொம்பும், பரந்த அடியும், சிறிய கண்ணும், செந்நிற வாயும்.

**5. காலாட்படை - இச்சொல்லைப் பிரித்து எழுதுக.**

கால் + ஆள் + படை.


**4. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மக்களுக்கு உரிய பண்பில்லாதவர் <u>மரத்தைப்</u> போன்றவர் என வள்ளுவர் கூறுகிறார்.
2. கங்கை கொண்ட சோழபுரம் <u>கங்காபுரி</u> என்று புலவர்களால் போற்றப்பட்டது.
3. கம்பைக் குறிக்கும் வீரக்கலை <u>சிலம்பாட்டம்</u> ஆகும்.

**5. பிறமொழிச் சொற்களையும் பேச்சுத்தமிழையும் நீக்கிச் சரியாக எழுதுக.**

1. டுமாரோ ஈவினிங் என் ஸிஸ்டர் ஊருக்குப் போவா.
   நாளை மாலை என் தங்கை ஊருக்குச் செல்வாள்.
2. ஷேர் ஆட்டோவில் பைவ் பாசஞ்சர்ஸ் இருக்காங்க.
   பகிர் தானியங்கியில் ஐந்து பயணிகள் இருக்கிறார்கள்.
3. என் வீட்டில் வாசிங் மிஷின் ரிப்பேராக இருக்கு.
   என் வீட்டில் சலவை இயந்திரம் பழுதாகி இருக்கிறது.

**6. பொருத்துக.**




**7. பாடலை நிறைவு செய்க.**

திருவிழாவாம் திருவிழா
எங்கள் ஊர்த் திருவிழா
ஊர் கூடும் திருவிழா
உறியடிக்கும் திருவிழா
**பெண்கள் கூடும் திருவிழா**
**கும்மியடிக்கும் திருவிழா**
**கரகமாடும் திருவிழா**
**கொண்டாடும் திருவிழா**





**8. கீழ்க்காணும் குறட்பாக்களிலுள்ள சொற்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்துக.**

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.


அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு.

| உயிர் எழுத்து இடம்பெறாத சொற்கள் | மெய்எழுத்து இடம் பெறாத சொற்கள் |
|---|---|
| நயனொடு | உலகு |
| நன்றி | நயனொடு |
| புரிந்த | |
| பயனுடையார் | |
| பண்புபா ராட்டும் | |
| குடிப்பிறத்தல் | |
| வழக்கு | |

## மொழியோடு விளையாடு

**1. சுழலட்டையைப் பயன்படுத்திக் குறிப்புகளுக்கு விடை எழுதுக**

1. உடலுறுப்புகளுள ஒன்று **கண்**
2 உப்புநீர் அதிகம் உளள இடம் **கடல்**
3 அழியாத செல்வம் **கல்வி**
4 பொருள்கள் வாஙகும் இடம் **கடை**
5 சமையலுக்குப் பயன்படுவது **கடுகு**
6 வீடு கட்டப் பயன்படுவது **கல்**
7 ஓவியம் என்பது **கலை**
8 பாரதியார் இயற்றியவை **கவிதை.**




1.

**2. நீக்குவோம்! சேர்ப்போம்!**

1. விதையில் ஓரெழுத்தை நீக்கி, வேறோர் எழுத்தைச் சேர்க்க
   விதை கதை - விடுகதை
2. சபையில் ஓரெழுத்தை நீக்கி வேறொர் எழுத்தைச் சேர்க்க
   கரம் சபை - சக்கரம்
3. விலையில் ஓரெழுத்தை நீக்கி வேறொர் எழுத்தைச் சேர்க்க
   தலை விலை - விடுதலை
4. ஆசையில் ஓரெழுத்தை நீக்கி வேறொர் எழுத்தைச் சேர்க்க
   ஆசை மரம் - ஆலமரம்
5. கடையில் ஓரெழுத்தை நீக்கி வேறொர் எழுத்தைச் சேர்க்க
   காரம் கடை - கடிகாரம்.